வைத்துவிட்டு வந்து, சாக்கை விரித்துப்போட்டுக் கிழக்கு முகமாகக் கால்களை நீட்டிப்போட்டு உட்கார்ந்துகொண்டாள். தனக்குக் கொடுத்த சாக்கை விரித்துப் போட்டுக்கொண்டே செடல் கேட்டாள்:

‘யே கெய்வி, எதானாச்சும் ஒரு கதெ சொல்லு. சொல்லாட்டி வுட மாட்டன்.’

‘ஒனக்கு மதம் முண்டிப்போச்சாடி குட்டி? சாவும் காலத்துல என்னெத் திரு வோடு எடுக்கும்படியா வச்சிட்டானேன்னு இருக்கயில, ஒனக்கு கதெயாடி கேக்கும் கதெ! நான் எங்காலத்துக்கும் கருத்தில்லாப் பொயப்பா பொயச்சிட்டனே!’

கிழவிக்கும் ஏதாவது பேசிக்கொண்டிருக்கலாம் போலிருந்தது. செடல் பட்டினி யாகக் கிடக்கும்போது தான் மட்டும் சாப்பிட்டோமே என்று நினைத்தவளுக்குச் சாப்பிட்ட தவிடு ஆவியாகிவிட்டதுபோல் இருந்தது. தவிட்டைச் சாப்பிடக் கொடுத்திருக்கலாம், ஆனால் விரதம் முறிந்துவிடுமே! அதனால் நாளைக்கொரு ‘பொழை’ வந்தால் என்ன செய்யமுடியும்? தெய்வக் காரியமாயிற்றே! செடலைத் தன்னுடன் ஒட்டிப்படுக்கச் சொன்னாள்:

‘இன்னம் கிட்டெ வாடி. மினி கதெ சொல்லுட்டுமாடி?’ என்று கேட்டவள், செடலின் பதிலுக்குக்கூடக் காத்திருக்காமல் கதையை ஆரம்பித்துவிட்டாள். கிழவியின் கதைகளில் பெரும்பாலும் மனிதர்கள் மரங்களாவார்கள், நரிகள் சிறு பிள்ளைகளாகிச் சிரிக்கும், எறும்புகள் யானைகளாகும், ஈக்கள் பருந்துகளாகும், மூக்குப் பீ பெரிய மலையாகப் பெருத்து வளரும், காதுக் குறும்பி இரு கரையும் புரண்டோடும் வெள்ளமாகப் பெருகும், பேய்கள் கன்னிப்பெண்களாக வரும், விக்கல் சத்தம் பெரிய இடி இடிப்பதுபோலக் கேட்கும், கடல் தண்ணீரையெல்லாம் ஒரு செப்புக் குடத்திற்குள் அள்ளிவிடும் பெண்கள் வருவார்கள், நக இடுக்கிலிருந்து எடுக்கும் அழுக்கைக் கொண்டு பல கோட்டைகளைக் கட்டுவார்கள், பெரியபெரிய ராசா, ராணிகளின் உயிர்கள் பிச்சைக்காரக் கிழவியின் சுண்ணாம்புக் குவளைக்குள் இருக்கும், சூறைக்காற்றில் வெட்டவெளி மைதானத்தில் பணியாரச் சட்டியை வைத்துப் பெண்கள் பணியாரம் சுட்டெடுப்பார்கள். அதோடு சிங்கவன ஆற்றின் கதை, தாம்பூலக் கன்னியின் கதை, திருடியே தின்று வாழ்நாளைக் கழிக்கச் சாபம் பெற்றவனின் கதை, புலிக் குன்று கதை, முதலைக் குன்று கதை, மலைக்குறத்தியின் கதை, காளை மாடு கன்றுபோட்ட கதை.

## 9

சூரியன் நன்றாக மேற்கில் சாய்ந்துவிட்டது. ஆனாலும் உச்சிப்பொழுதைப் போல காங்கை வீசிக்கொண்டிருந்தது. எத்தனை முறை கூட்டினாலும் ஆடுமாடு கட்டியிருந்த இடம் மாதிரியும் குடிபோன இடம் மாதிரியும்தான் தெரியும். சாதாரணமாகக் காற்று அடித்தாலே வீடும் கோயிலும் குப்பையும் மண்ணுமாகி விடும். சூறைக்காற்று என்றால் ஊர்ப்பட்ட அழுக்கு சேர்ந்துவிடும். கூட்டி மாளாது. களம் மாதிரிதான் இருக்கும். குப்புறப் படுத்துக்கிடந்த செடலுக்கு

வியர்வைக் கசகசப்பில் தொடர்ந்து படுத்திருக்கப் பிடிக்காமல் எழுந்து வெளியே வந்தாள். கிழவி எங்காவது தென்படுகிறாளா என்று ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு கோயிலைப் பார்த்தாள். இரண்டு திண்ணைகளையும் பார்க்கச் சகிக்கவில்லை. வீட்டிலிருந்த விளக்குமாறை எடுத்துவந்து கோயிலைக் கூட்டத் தொடங்கினாள். உள்கூடத்தைக் கூட்டிக் குப்பையை வாசலுக்கு வெளியே தள்ளிக் கொண்டுவந்து விட்டுவிட்டு, விளக்குமாறை நன்றாகத் தரையோடு படியப் போட்டு இரண்டு திண்ணைகளையும் கூட்டி முடிக்கும்போது, பாம்பைக் கண் டால்கூட எட்டி அடிவைத்து அவசரமாக நடக்காத கிழவி 'யே குட்டி, யே குட்டி' என்று கத்திக்கொண்டே, ஒருநாளுமில்லாமல் அவளுடைய இயல்புக்கு மீறியவளாக, ஓட்டமாக ஓடிவந்ததைக் கண்டு திடுக்கிட்டுப்போய் நிமிர்ந்து நின்று பார்த் தாள். ஓடிவந்த வேகத்திலேயே கிழவி செடலின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் வேப்பமரத்தைத் தாண்டி நிறுத்தியவள், தலையைத் தூக்கிவிட்டு 'அங்க பாருடி' என்று சொன்னாள். வேண்டா வெறுப்பாக வானத்தைப் பார்த்த செடலுக்கு எம்பிக் குதிக்க வேண்டும் போலிருந்தது. அவளால் நம்ப முடியவில்லை. ஆசையுடன் வானத்தையே பார்க்க ஆரம்பித்தாள்.

கிழவி இவ்வளவு சந்தோசமாக இருந்து செடல் ஒருநாளும் பார்த்ததில்லை. அவளுடைய உடம்பில் மட்டுமல்ல, குரலிலும் புதுத் தெம்பு ஏறியிருந்தது. கைகளைத் தட்டுவதும் வாய்விட்டுச் சிரிப்பதுமாக இருந்தாள். என்ன நினைத் தாளோ சாமிவந்து ஆடிய பெண் மாதிரி சடேரென்று நெடுஞ்சாண்கிடையாகத் தரையில் விழுந்து கும்பிட்டாள். செடலையும் இழுத்துக் கும்பிடவைத்தாள். பிறகு இரண்டே தப்படியாகத் தாவிக் கோயிலுக்குள் ஓடி, சாமி சிலைக்கு முன் விழுந்து கும்பிட்டாள். அங்கிருந்து பைத்தியம் மாதிரி வெளியே ஓடிவந்தாள். நேரே வாளகுருசாமி இருந்த இடத்திற்கு ஓடி, விழுந்து கும்பிட்டாள். பிறகு இரண்டு கைகளையும் குவித்தபடியே மாரியம்மன் கோயிலைச் சுற்றிவர ஆரம்பித்தவள், இரண்டாவது சுற்றில் செடலையும் சேர்த்துக்கொண்டு சுற்றினாள். அவர்கள் இருவரும் கோயிலை மூன்று சுற்றுகள் சுற்றி முடிப்பதற்குள்ளாகவே காற்று சூறைக்காற்றாக மாறி வீசத் தொடங்கியிருந்தது. மூன்று நான்கு வருசமாக வீசிக்கொண்டிருந்த அனல் காற்றாக இல்லாமல் ஈர வாடையுடன் குளிர்ந்த காற்றாக இருந்தது. ஆளையே கீழே தள்ளிவிடும் போலிருந்தாலும் காற்றை எதிர்ப்பது மாதிரி விறைப்பாகக் கிழவியும் செடலும் நின்றுகொண்டிருந்தனர். கிழவிக்கு எப்படி இவ்வளவு தெம்பு வந்திருக்கும்? வீசிக்கொண்டிருந்த காற்றை எதிர்த்து நிற்கிறாளே! குப்பையும் கூளமும் மண்ணுமாகக் காற்றில் பறந்து கொண்டிருந்ததால் கண்களைத் திறந்து பார்க்க முடியவில்லை. சிறிது நேரம் தான் ஒரே காற்றாக இருந்தது. பிறகு படிப்படியாக மட்டுப்பட ஆரம்பித்தது. கார்த்திகை மாதத்து வானம் போலக் கட்டிகட்டியான கருத்த மேகங்கள் வானத்தை முற்றிலுமாக மறைத்துவிட்டன. ஒன்றிரண்டு துளிகள் விழ ஆரம்பித்ததும், பேய் பிடித்த பெண் ஓடுவது மாதிரி 'யே சனங்களே' என்று கத்திக்கொண்டு கிழவி பறத்தெருப் பக்கமாக ஓட ஆரம்பித்தாள்.

கிழவி ஓடுவதையே பார்த்துக்கொண்டிருந்த செடல், அவள் சற்றுத் தொலை வாக ஓடியதும் வானத்தைப் பார்க்க ஆரம்பித்தாள். நேற்றிரவு இல்லை; காலை

யில் பார்த்த வானமாகக்கூட இல்லாமல், இருட்டைப் பூசிக்கொண்ட வான மாக எப்போது மாறியது? மண்பானையிலிருக்கும் தண்ணீரைக் குடித்தது மாதிரி, உடம்பில் தெளித்துக்கொண்டது மாதிரி இருக்கிறது. இந்த மாதிரியான காற்று அவளுடைய உடம்பில் என்றுமே பட்டதில்லை. நெருப்பைக் கொண்டுவந்து முகத்தில் அப்புவது மாதிரியான காற்றைத்தான் இரவும் பகலும் அனுபவித்திருக் கிறாள். மழைத்துளிகள் விழ ஆரம்பித்திருந்தன. 'பொட்பொட்' என்று உடம்பில் படுகிற ஒவ்வொரு துளியும் உடம்பிலுள்ள மயிர்க்கால்களையெல்லாம் விறைத்து நிற்கவைத்தது. செடல் ஒருநாளுமில்லாமல் 'ஹாஹா'வென்று வாய்விட்டுச் சத்தமாகச் சிரித்தாள். இடம் மாற்றி இடம் மாற்றி நின்றுகொண்டு வானத்தைப் பார்த்தாள். அவளுக்கு மேகத்தோடு மேகமாக மிதந்து நகர்ந்துகொண்டிருப்பது போல இருந்தது. துளிகள் விழ ஆரம்பித்ததும் அவளுக்குப் பொறுக்க முடிய வில்லை. வேகவேகமாகக் கைகளைத் தட்டினாள். மனம் பூரிப்பால் விம்மியது. எதையாவது செய்ய வேண்டும் என்ற வெறி உண்டாயிற்று. என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை. நொடிக்கு நொடி தூறல் அதிகமாக விழ ஆரம்பித்ததும் அவளுக்கு உற்சாகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சத்தம்போட்டுச் சிரித் தாள். கைகளைத் தட்டினாள். செடல் மாதிரி சுற்றிச் சுழன்றாடினாள். ரொம்பக் காலத்திற்குப் பிறகு, தூறல் படுவதால் பூமியிலிருந்து வெக்கை கிளம்பிற்று. அதைப் பொருட்படுத்தாமல் குதிப்பதும் சுழன்றாடுவதுமாக இருந்தாள். ஒரே இடத்தில் அவளால் நிற்க முடியவில்லை. உடம்பில் உண்டான சிலிர்ப்பு நொடிக்கு நொடி கூடியதே தவிர, குறையவில்லை. தூறல் கொஞ்சம்கொஞ்சமாக வலுத்து, மழை கொட்ட ஆரம்பித்தது. கொட்டும் மழையில் நனைகிறோம், துணி நனைகிறது என்ற உணர்ச்சிகூட இல்லை. காளி வேசம் கட்டிக்கொண்டு ஆடுபவர்கள் மாதிரி துள்ளிக் குதித்து, ஓடி ஆட வேண்டும் என்ற வெறிதான் உண்டாயிற்று. அந்த வெறி அவளுக்குள் தீயைப் போலப் பரவிக்கொண்டிருந்தது.

சனங்களெல்லாம் இங்குமங்குமாக ஓடுவதும் ஆடுவதுமாக இருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு மேலும் கூடுதலான வெறியுண்டாயிற்று. உடம்பில் எலும்பைத் தவிர, அதை மூடியிருக்கும் தோலைத் தவிர, அல்லை ஒட்டிப்போன, மருந்துக்கும் சதைப்பிடிப்பு இல்லாதவர்களால்கூட எப்படி இவ்வளவு வேகமாகக் குரலெழுப்பிக் கத்தவும், சிறுவர்கள் மாதிரி ஓடவும், ஆடவும் குதிக்கவும் முடி கிறது? 'திரும்பியும் தாது வருசம் வந்துடுச்சு டோய்' என்று தினமும் இந்த வார்த்தை யைப் பாட்டாகப் பாடியவர்கள், பனஞ்சோற்றை, தென்னஞ்சோற்றை, ஈச்சங் குத்துச் சோற்றை அண்ணன் தம்பிகளுக்கு, உறவுக்காரர்களுக்குக்கூடத் தெரியா மல் மறைத்துவைத்து ரகசியமாகத் தின்றவர்களா இவர்கள்? செடலுக்கு மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு ஆட, சிரிக்க, குதிக்க வேண்டும்போலிருக் கவே சனங்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்த இடத்திற்கு ஓட ஆரம்பித்தாள்.

ஊரிலுள்ள மொத்த சனத்திரளும் ஒரே இடத்தில் சொல்லிவைத்தாற்போலக் கூடி, இதுவரை பார்த்திராத அதிசயம் நிகழ்ந்துகொண்டிருப்பது மாதிரி வானத் தையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது. கருத்த மேகங்கள் பல திசை களிலும் திரிந்துகொண்டிருந்தன. அந்த மேகங்களைப் பார்ப்பதற்காகத்தான் கண்களை இதுவரை வைத்துக்கொண்டிருந்தது போல ஒவ்வொருவரும் மேகங்

களையே பார்த்துக்கொண்டிருந்தனர். மழை கனக்கக் கனக்க, கூடியிருந்த கூட்டத்திற்கு என்னவாயிற்றோ! படையாகத் திரண்டு மாரியம்மன் கோயிலுக்கு ஓடி வந்தது. பலர் கோயிலின் வாசலில் நின்றுகொண்டும், சிலர் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தும் கும்பிட்டனர். ஒன்றிரண்டு பேர் உற்சாக வெறியில் கோயிலுக்குள்ளேயே ஓடிப்போய் சாமி கும்பிட்டுவிட்டு வந்தனர். பெண்கள் செடலுக்கு ஆசை ஆசையாக முத்தமிட்டார்கள். ஒரு சிலர் அவளுடைய கன்னத்தைக் கிள்ளினர். நடுத்தர வயதுள்ள பெண்கள் அவளை இடுப்பில் தூக்கிவைத்துக்கொண்டு கொஞ்சினர். இதைப் பார்த்த ஆண்கள் கைப்பிள்ளையைத் தூக்கி தோளில் உட்கார வைத்துக்கொள்வதுபோல அவளைத் தூக்கித் தோளில் உட்காரவைத்துக்கொண்டு கோயிலைச் சுற்றி ஓடிவந்தார்கள். தூக்கிக்கொண்டவர்கள் குறவன் குறத்தி ஆட்டம் மாதிரி ஆடினார்கள், கோயிலின் முன் கூடியிருந்த கூட்டத்தின் ஆட்டமும் கொண்டாட்டமும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. அந்த நேரத்தில் ஐந்து வருசமாக மழையில்லாமல் ஊரே சுடுகாடாகிவிட்டது என்ற எண்ணம் யாருடைய மனத்திலும் இருந்தது மாதிரி தெரியவில்லை. சனக் கூட்டத்திற்குப் பைத்தியம் பிடித்து விட்டது மாதிரி ஈசல் கூட்டமாக ஆற்றங்கரையை நோக்கி ஓடத் துவங்கியது. இவர்கள் ஆற்றங்கரைக்குப் போய்ச் சேரும்போது, ஆற்றின் தெற்குக் கரையில் ஏற்கனவே குடித்தெருச் சனங்கள் கூடியிருந்தது தெரிந்ததும், இக்கரையில் கூடியவர்களுக்கு உற்சாகம் எல்லையில்லாமல் போயிற்று. ஆண்கள், பெண்கள், கிழடுகள், பிள்ளைகள் என்று ஒவ்வொருவருமே காளி வேசம் கட்டிக்கொண்டவர்கள்போல் இருந்தனர். திருவிழாவில் அக்னிச்சட்டி தூக்கும்போது, அலகு குத்திக்கொண்டு வரும்போது, அக்னி மிதிக்கும்போது, காத்தவராய சாமி கழுமரம் ஏறும்போது உண்டாகும் ஆர்ப்பாட்டத்தைவிட, கூச்சலைவிடப் பெரிதாக ஆர்ப்பாட்டமும் இரைச்சலுமாக அந்த இடம் இருந்தது. ஆட்டத்தோடு ஆட்டமாக, குதியோடு குதியாக ஒருவரையொருவர் நெட்டிக்கொண்டும், தரையில் இடித்துத்தள்ளியும், உருட்டிப் புரட்டியெடுத்தும் விளையாட ஆரம்பித்தனர். யாரும் தள்ளிவிடாமலேயே சில பிள்ளைகள் தாங்களாகவே தரையில் விழுந்து புரண்டனர். கிழடுகள் வானத்தைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டு இரு கைகளிலும் மழைத்தண்ணீரைப் பிடித்து ஆசையாகக் குடித்தனர். இதைப் பார்த்த பிள்ளைகள் வானத்தைப் பார்த்த நிலையில் வாயைத் திறந்தபடி வைத்திருந்து அதில் விழுந்த மழைத்துளியை இனிப்புப் பொருளை நக்கிச் சப்பி சுவைப்பதுபோலச் சுவைத்தனர். கிழவன் கிழவிகளாக இருந்த பெரும்பாலானோர் வானத்தை நோக்கிக் குவித்திருந்த கைகளைப் பிரிக்காமலேயே நின்றுகொண்டிருந்தனர். அதோடு ‘பகவான் கண்ணத் தொறந்துட்டான். அந்த மாரியாயி மடிப்பிச்சப் போட்டுட்டா. கையேந்தி தவுசு பண்ணுன மக்கள அந்தச் செல்லியாயி கைத்தூக்கிவுட்டுட்டா. மானம் பாத்தாத்தான் மனுசன் மனுசனா மண்ணுல நெலச்சித் தரிச்சி நிக்க முடியும். இல்லன்னா மசுரு பொசுங்குறாப்பல எல்லாரும் பொசுங்கிப்போயி ஈச மடியுறாப்ல மடிய வேண்டியதுதான். ஏதோ ஏய மக்க பருதேவத்தப் பாத்து இப்பியாச்சும் அந்த ஆண்டவன் படியளந்தானே’ என்று ஓயாமல் பேசிக்கொண்டிருந்தனர். முதலில் மழைக்கால் எந்த மூலையில் இறங்கியது, அதை முதலில் பார்த்தது யார், காற்றின் போக்கில் மேகங்கள் எப்படியெல்லாம் நகர்ந்துவந்தன, குளிர்ந்த காற்று எப்போது

வீசத் தொடங்கியது, மழையின் வாசனை தூறல்போடுவதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பாக வந்தது, மழை பெய்ய ஆரம்பித்தவுடன் பூமியிலிருந்து வெக்கை எப்படி வேக்காடாக மாறிக் கிளம்பியது என்பதையெல்லாம் ஒவ்வொருவரும் தான்தான் விஷயத்தை முன்னதாகவே சொன்னதாகச் சொல்லிக்கொண்டனர். 'வர வெள்ளிக் கியமக்குள்ள மய பெய்யுமின்னு நான் சொல்லலியா?' என்று ஒரு கிழவன் சொல்ல, 'நீ சொன்னதால இல்ல, செடலு விரதம் இருந்ததாலதான் மய பெய்யுது' என்று கிழவி சொல்ல, மாரியம்மனுக்குக் கோழி காவு கொடுத்துப் பொங்கல் படைக்க வேண்டும் என்று வடக்குத் தெருக்காரன் ஒருவன் சொன்னதைக் கூட்டம் மறு பேச்சின்றி ஏற்றுக்கொண்டது. தர்மகர்த்தாவையும் அய்யரையும் கூட்டத்தில் தேடிக் கண்டுபிடித்து விஷயத்தைச் சொன்னார்கள். இதையேதான் அவர்களும் நினைத்துக்கொண்டிருந்ததாக அவர்கள் சொன்னதோடு, யாருடைய வீட்டில் கோழியும் அரிசியும் இருக்கிறது என்று விசாரிக்க ஆரம்பித்தனர். காதுகுத்தக்கூட ஒரு நெல் அரிசி பறத்தெருவில் யாருடைய வீட்டிலும் இல்லை என்று தெரிந்த தும், கோழியைத் தயார்செய்து வையுங்கள் என்று சொல்லிவிட்டு அய்யரும் தர்மகர்த்தாவும் மழையைப் பொருட்படுத்தாமல் குடித்தெருவை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தனர்.

செடல் இருந்த விரதத்தால்தான் மழை பெய்கிறது என்ற பேச்சு வந்ததும் கூட்டத்திலிருந்த ஒரு பகுதி செடலைத் தூக்கிக்கொண்டு ஆட ஆரம்பித்தது. பிறகு தரையில் போட்டுப் புரட்டியெடுத்தது. சேற்றை வாரி முகத்தில் பூசியது. சாமியைத் தூக்கிக்கொண்டு ஊர்வலம் ஓடுவதுபோல ஓடினார்கள். ஆள்மாற்றி ஆள்தூக்கி அவளைப் பிய்த்தெடுத்துவிட்டார்கள். எல்லாவற்றுக்கும் அவள் சிரித்த படியே இருந்தாள். கிழவியின் முகத்தில் ஒரு சிறுவன் சேற்றை அள்ளி முகத்தில் பூச ஆரம்பித்ததும், கூட்டம் கிழவியைப் பிடித்துக்கொண்டது. பலரும் போட்டி யிட்டுக்கொண்டு சேற்றைவாரிப் பூசப்பூச, சாமிவந்து ஆடும் பெண் மாதிரி கிழவி எக்காளமாகச் சிரித்துக்கொண்டு 'நான் பெத்த ராசென்களா பூசுங்க சாமி, பூசுங்க' என்று சொல்லி உற்சாகமாகக் கூவினாள்.

இப்போது மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்துகொண்டுவிட்டது. ஊர்க் கட்டுமானம் மாதிரி மழையில் நனைந்தபடி சனங்கள் நின்றுகொண்டிருந்தனர். இடிச் சத்தத்திற்காகக் காதுகளை மூடிக்கொள்ளவில்லை. மின்னலுக்காகக் கண் களை மூடிக்கொள்ளவில்லை. சின்ன இடிச் சத்தத்திற்கே 'அர்ச்சுனா அர்ச்சுனா' என்று கத்துபவர்கள்கூட, இப்போது பெரியபெரிய இடியாக, காதுகளே செவி டாகிப் போகிற அளவு இடித்தும் பொருட்படுத்தவில்லை. இடி விழுந்து செத்தா லும், கரிக் கட்டையாகக் கருகிப்போனாலும் பரவாயில்லை என்பது போலவும், இடிச் சத்தத்தைக் கேட்பதற்காகவே நின்றுகொண்டிருந்தது போலவும் ஒவ்வொரு வரும் நின்றுகொண்டிருந்தனர். கண்தூரம்வரை உப்பு மூட்டையைக் கவிழ்த்துக் கொட்டியது மாதிரி வானத்திலிருந்து மழை சரம்சரமாக இறங்கிக்கொண்டிருந்தது.

பறத்தெருவிலிருந்து ஓடிவந்த தண்ணீர் முதலில் நூலாக ஓடிவந்து ஆற்றுக்குள் இறங்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த பிள்ளைகள் தண்ணீர் ஆற்றுக்குள் இறங் கும் இடத்திற்கு ஓடிப் போய் சில்லு விளையாடுவது மாதிரி தண்ணீரைக் காலால்

செத்திசெத்தி விளையாட ஆரம்பித்தனர். தண்ணீரில் பிள்ளைகள் விளையாடு வதைப் பார்த்த செடல் ஒரே ஓட்டமாக ஓடிப் போய்ப் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு தண்ணீரைச் செத்தி விளையாட ஆரம்பித்தாள். பெரியவர்கள் செட லைத் தூக்கிக்கொண்டு ஆடியது மாதிரி, ஓடியது மாதிரி ஓட வேண்டும் என்று பூங்கோதையின் மகன் கணபதி சொன்ன மறுநொடியே அவளைத் தூக்கிக்கொண்டு பிள்ளைகள் ஆட ஆரம்பித்தனர். பிள்ளைகளுடைய இழுப்புகளுக்கெல்லாம் செடல் தண்ணீரில் போட்ட துணி மாதிரி உடம்பை வளைத்து நெளிந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். அழுக்குத் தண்ணீரில் குதிப்பது, மணலில் படுத்துப் புரள்வது பிள்ளைகளுக்கு எல்லையற்ற சந்தோசமாக இருந்தது. பிள்ளைகள் செய்யும் எல்லாக் காரியங்களையும் பார்த்தாலும் பெரியவர்கள் பெயருக்குக்கூட அவர்களை மிரட்டவில்லை. பிள்ளைகளின் விளையாட்டு தற்போதைக்கு நிற்காது போலிருந்தது.

நேரமாகநேரமாக வானத்திற்கு வேகம் வந்துவிட்டதுபோல மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது. ஆனால் கூட்டம் கலையாமல் இருந்ததோடு ஆற்றின் மையத்தில் மேற்கிலிருந்து கோடாக ஓடி வந்துகொண்டிருந்த தண்ணீரைப் பார்ப் பதற்காக நகர்ந்து சென்றது. அழுக்குத் தண்ணீர் என்றுகூடப் பார்க்காமல் பெரும் பாலானவர்கள் இரண்டு கைகளாலும் வெறியுடன் அள்ளிஅள்ளிக் குடித்தனர். பலர் அப்படியே கவிழ்ந்து குடித்தனர். பிறகு தண்ணீரில் படுத்துப் புரள ஆரம் பித்தனர். கோடாக வண்டித்தட அளவுக்கு ஓடி வந்துகொண்டிருந்த தண்ணீர் மெல்லமெல்லப் பாவில் நூல் சேர்வது மாதிரி பெருக ஆரம்பித்தது. தண்ணீரின் அளவு அதிகரிக்கஅதிகரிக்க, சனங்களின் உற்சாகமும் கொண்டாட்டமும் அதிகரித்த வாறே இருந்தது.

செடல் கூட்டத்தோடு கூட்டமாகத் தண்ணீரை அள்ளிக் குடித்தாள். பிறகு மற்றவர்கள் மாதிரியே புது வெள்ளத்தில் உருண்டு புரண்டு துள்ளிக் குதித்து விளையாட ஆரம்பித்தாள். முன்பைவிட இப்போது மழை கனத்துப் பெய்துகொண் டிருந்தது. முகத்தில் உடம்பில் ‘சலீர்சலீர்’ என்று அறைந்துவிழும் மழைத்துளிகள் உடலில் இன்னதென்று சொல்ல முடியாத கிளர்ச்சியை உண்டுபண்ணின. அந்தக் கிளர்ச்சி நொடிக்கு நொடி பெருகிக்கொண்டே இருந்தது. புதுவெள்ளத்தைப் பார்க்கப்பார்க்க அவளுடைய மனம் பஞ்சாகப் பறப்பதுபோலிருந்தது. உடலின் கனமும் கணத்திற்குக் கணம் குறைந்துகொண்டிருப்பது போலிருந்தது.

ரொம்பக் காலம் கழித்து ஆற்றில் வெள்ளம் வருவதால் தண்ணீர் , சாணத்தைக் கரைத்து ஊற்றியது மாதிரி தடதடவென்றிருந்தது. குச்சிகள், சிறுசிறு பூண்டுச் செடிகள், வேரோடு பிடுங்கிக்கொண்ட சோற்றுக்கற்றாழைகள், கிழிந்து நைந்து போன கந்தல் துணிகள், பிய்ந்துபோன ஈச்சம், கோரைப் பாய்கள், காய்ந்த பனை, தென்னை மட்டைகள், கொத்துக்கொத்தாக முள்செடிகள் என்று என்னென்னவோ மிதந்து வந்தன. முடிந்த மட்டும் முழு ஆற்றையும் செடல் பார்க்க முயன்றாள். நூறு கஜ தூரத்திற்கு அப்பால் என்ன இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்க முடி யாத அளவுக்கு மழை அடர்த்தியாக இறங்கிக்கொண்டிருந்தது. ‘இம்புட்டு பெரிய ஆறு இந்த ஜில்லாவிலேயோ மாகாணத்திலேயோ கெடயாது’ என்று கிழவி

அடிக்கடி சொல்வாள். மற்ற ஊர்களிலுள்ள ஆறுகளில் உள்ளது மாதிரி குத்துகுத்தாக எருக்கஞ்செடிகளோ, பீக் கருவைமுள் செடிகளோ, நாணல் புதர்களோ முளைத்துப் பாதி அடைத்துக்கொண்டிருக்காது. மணலைப் பார்த்தால் அரிசி மாவைக் காய வைத்ததுபோல இருக்கும். ஆற்றில் எந்த இடத்திற்குப் போனாலும் ஆசைக்குக் கூட ஒரு பிடி பெருமணலைப் பார்க்க முடியாது. அள்ளிவிட்டால் காற்றில் பறந்து போகும் நொய்மணல். இரண்டு கரைகளும் அண்டை கழித்த வரப்பு மாதிரி ஒரே ஒழுங்காக இருக்கும். பேச்சுக்குக்கூட கோணல்மாணல், வளைவு சுளிவு இருக்காது. இரு கரைகளை ஒட்டியும் மூங்கில் தோப்பு, இலுப்பைத் தோப்பு, தென்னந்தோப்பு என்று வரிசையாகப் போய்க்கொண்டேயிருக்கும். ஆற்றின் வடக்குக் கரையில் பறத்தெருவும், தெற்குக் கரையில் குடித்தெருவும் இருந்தன. எல்லாச் செழிப்பும் தெற்குக் கரையில்தான் என்றாலும் இப்போது எல்லாமும் பட்டுப்போய் நிற்கின்றன. பறத்தெருவைத் தாண்டி வடக்கில் போனால் வானம் பார்த்த மேட்டு நிலங்கள் வரும்.

'செடலு செடலு' என்று பலர் ஒரே நேரத்தில் கத்திக் கூப்பிடுவது கேட்டது. தண்ணீரை விட்டு வெளியே வந்த செடல் சத்தம் வந்த இடத்தை நோக்கிப் போனாள். மழையில், இருட்டில் அருகிலிருந்த ஆட்களின் முகங்கள்கூடச் சரியாகத் தெரியவில்லை. அய்யரும் தர்மகர்த்தாவும் பொங்கல் வைக்க வேண்டும், சீக்கிர மாகக் கோயிலுக்குக் கிளம்பு என்று சொன்னதும், துணியைப் பிழிந்துவிட்டு, தலைமயிரை ஒதுக்கிக்கொண்டு கோயிலுக்குப் போகக் கிளம்பினாள். அதற்குள் யாரோ சாமியைத் தூக்க வேண்டும் என்று சொன்னதுமே கூட்டம் அதையே பிடித்துக்கொண்டு 'ஆமாம் சாமியத் தூக்கித்தான் ஆவணும்' என்று சொல்லிக் கத்த ஆரம்பித்தது. கூச்சலை அடக்கிவிட்டு 'எல்லாத்தயும் விடிஞ்சி பாத்துக்கலாம். இப்ப கோவுலுக்குப் போங்க' என்று சொல்லிவிட்டு அய்யர் முன்னே நடக்க ஆரம்பித்தார். சிதறி நின்ற கூட்டமும் அய்யரைத் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தது. கரையேறும்போது குடித்தெரு மணியக்காரன் சாக்கை மாட்டிக்கொண்டு வந்து வழியை மறித்து 'செல்லியாயிக்கு செறப்பு கொடுக்கப் பொட்டுக்கட்டி வுட்ட குட்டியக் கூப்புட்டாரச் சொன்னாங்க' என்று சொன்னதும், அய்யர் மறுபேச்சு பேசாமல் 'குடித்தெருவுக்குப் போயிட்டு நேரத்திலியே வா. நாங்க மாரியாயி கோவுல்ல குந்தியிருக்கம்' என்றுச் செடலிடம் சொன்னதும், செடல் மணியக் காரனுடன் நடக்க ஆரம்பித்தாள்.

## 10

**'யே** அங்க போறவ யாருடி?'

'யாஞ்சாமி.'

'எந்தத் தெருவு?'